# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் - 12

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
GEOGRAPHY I, II

| 22 | T | I.II |
|---|---|---|

Three hours
மூன்று மணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

சுட்டெண் :- ......................

**அறிவுறுத்தல்கள் :**

- **பகுதி I** இல் பல்தேர்வு வினாக்கள் 15 உள்ளன. அதற்கான விடையினை இவ் வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்.
- **பகுதி II** இல் இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். இதற்காக உமக்கு 1:50 000 இடவிளக்கப்படமும், உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்.
- **பகுதி III** இல் **அ, ஆ, இ** பகுதிகளிலிருந்து ஒவ்வொரு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## பகுதி - I

01. படமொன்றினை அமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்
    1. நிறம், குறியீடு, அமைப்பு
    2. திசை, அளவு, நிறம்
    3. நீளம், அகலம், பரப்பு
    4. அமைவு, அளவுத்திட்டம், திசை
    5. அமைவு, குறியீடு, பரப்பளவு (......)

02. கி.பி. 250 அளவில் புவியினைச் சுற்றியுள்ள அளவை அளத்தல் முறையினை மேற்கொண்டவர்
    1. இருடோஸ்தீனிஸ்
    2. தொலமி
    3. அரிஸ்டோட்டில்
    4. பிளட்டோ
    5. மெகஸ்தினிஸ் (......)

03. காவித் தரவு மாதிரியில் புள்ளிகள் மூலம் காட்டப்படும் அம்சமாக கருதக்கூடியது
    1. பயிர் நிலம்
    2. பாதை
    3. நீர்த்தேக்கம்
    4. காடுகள்
    5. கிணறு (......)

04. பினவருவனவற்றுள் கருப்பொருள் தேசப்படமாக கருத முடியாதது
    1. இலங்கையின் தரைத்தோற்றப் படம்
    2. உலக சனத்தொகை பரம்பல் படம்
    3. உலகின் இயற்கைக் காடுகளின் பரம்பல்
    4. இடவிளக்கப்படங்கள்
    5. ஆசியாவின் சனத்தொகை அடர்த்தி (......)

05. 1:50 000 மெற்றிக் தேசப்படம் தயாரிப்பதற்காக மெற்றிக் அளியடைப்பு புள்ளியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் மலையாக காணப்படுவது
    1. பேதுருதாலகால
    2. சிவனொலிபாதமலை
    3. ஹோட்டன் சமவெளி
    4. நோட்டன் பிரிஜ்
    5. றக்குவானைக் குன்று (......)

06. தகடுகள் ஒன்றோடு ஒன்று ஒருங்கும் போது ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக உருவாகும் மடிப்பு மலைக்கு உதாரணமாக கொள்ளக் கூடியது.

01. அற்லஸ் மலை　02. அப்பலாச்சியன் மலை　03. பெரிய பிரிப்பு மலை

04. இமய மலை　05. இந்துகுஷ் மலை　(……)

07. தனித் தொகுதிக்கு உதாரணமாய் அமைவது?

1. ஞாயிற்றுத் தொகுதி　2. புவித் தொகுதி　3. ஆற்றுத் தொகுதி

4. சூழல் தொகுதி　5. உயிர்த் தொகுதி　(……)

08. ஒருங்கும் தகட்டசைவுளினால் உருவாகும் நிலவுருவங்களைக் கொண்ட விடைத்தெரிவு.

1. புதிய சமுத்திர படுக்கை, சமுத்திர மலைத்தொடர், பிளவு பள்ளத்தாக்கு
2. புதிய சமுத்திர படுக்கை, சமுத்திர மலைத்தொடர், எரிமலைத் தீவு
3. சமுத்திர மலைத்தொடர், பிளவு பள்ளத்தாக்கு, அகழிகள்
4. பிளவு பள்ளத்தாக்கு, அகழிகள், மடிப்பு மலைகள்
5. மடிப்பு மலைகள், அகழிகள், எரிமலைத் தீவு　(……)

09. வானில் முகில் மழையை அளவிடப் பயன்படுத்தப்படும் அளவீடு அழைக்கப்படுவது?

1. வெப்பமானி　2. பரோமீற்றர் (Baro Meter)　3. ஒக்ராஸ் (Oktas)

4. ஈரப்பதமானி (Hygro meter)　5. அனிமோ மானி (Animo Metor)　(……)

10. இலங்கையில் யுராசிக் படிவுகள் காணப்படும் இடங்களாவன

1. தப்போவ, ஆண்டிகம, யாழ்ப்பானம்　2. புத்தளம், சிலாபம், அனுராதபுரம்

3. தப்போவ, ஆண்டிகம, பல்லம　4. இறக்குவானை, புலுத்தோட்ட, ஹப்புத்தளை

5. இறக்குவானை, ஆண்டிகம, பல்லம　(……)

11. "புவியின் தோற்றப்பாடுகளின் பல்வகைமையை கற்றல் புவியியல் கற்கை ஆகும்" எனக் கூறியவர்

1. கெப்பன்　2. கால்ரிட்டர்　3. ரிச்சட் ஹாட்சோன்

4. உவெக்னர்　5. கம்போல்ட்　(……)

12. 2050 இல் உலகில் அதிக சனத்தொகையை கொண்டிருக்கும் நாடுகள் என எதிர்வு கூறப்பட்டுள்ள நாடுகளைக் கொண்ட விடைத் தெரிவு யாது?

1. சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேசியா, பிறேசில்
2. இந்தியா, சீனா, பாகிஸ்தான், இந்தோனேசியா, பிறேசில்
3. சீனா, இந்தியா, பிறேசில், ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேசியா
4. சீனா, இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், ஐக்கிய அமெரிக்கா
5. இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா, நைஜீரியா, இந்தோனேசியா　(……)

13. ஆசிய பிரதேசங்களில் உயர்ந்த நகராக்க மட்டத்தை கொண்ட நாடுகளாக காணப்படுபவை

1. சிங்கப்பூர், யப்பான், கொரியா　2. மலேசியா, சீனா, இந்துனேசியா

3. இலங்கை, நேபாளம், கம்பூச்சியா　4. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்

5. மாலைதீவு, பூட்டான், நேபாளம்　(……)

14. பின்வரும் நகரங்களில் வதிவிட நகரங்களாக கருதப்படுபவை எது?

1. கண்டி, அநுராதபுரம் 2. கொழும்பு, பொலனறுவை 3. கண்டி, கதிர்காமம்
4. குருநாகல், கேகாலை 5. பிலியன்தல, கடுவெல (……)

15. ‘‘வயோதிபமடைதல்’’ சுட்டி காட்டப்படுவது?

1. 60 வயதுக்கு மேற்பட்டோரை 15 வயதுக்கு குறைவாக உள்ள சனத்தொகையின் வீதமாகக் காட்டல்
2. 60 வயதுக்கு மேற்பட்டோரை சனத்தொகையின் வீதமாக காட்டல்
3. 60 வயதுக்கு மேற்பட்டோரை 15 வயதுக்கு குறைவாக உள்ள சனத்தொகையில் ஆயிரத்துக்கு காட்டல்
4. ஒரு நாட்டின் சனத் தொகையில் வயோதிபரின் வீதத்தை காட்டல்
5. ஒரு நாட்டின் சனத்தொகையில் வயோதிபரின் எண்ணிக்கையை ஆயிரத்துக்கு காட்டல் (……)

## பகுதி - II

01. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத்திட்டத்திளமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்கு தரப்பட்டுள்ளது. அப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) நாற்பக்கள் A மற்றும் B இல் காணப்படும் அம்சங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) C மற்றும் D இனால் காட்டப்படும் குடியிருப்பு வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) E, F, G, H ஆகிய எழுத்துக்களினால் காட்டப்படும் இடங்களில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) வடமேற்கு மூலையில் காணப்படும் நிர்வாக எல்லை யாது? (01 புள்ளி)

(v) பிபிலை நகரை அண்மித்துக் காணப்படும் சேவை நிலையங்கள் ஆறு தருக. (03 புள்ளிகள்)

(vi) தென் மேற்கு காற்பகுதியில் எந்தவொரு விவசாய நடவடிக்கையும் விருத்தியடையாமைக்காக காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(vii) படப் பிரதேசத்தின குடியிருப்புப் பாங்குகள் தொடர்பாக ஆராய்க. (04 புள்ளிகள்)

02. தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தில், வழமையான குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) எகிப்து
(ii) அந்தீஸ் மலை
(iii) பனாமாக் கால்வாய்
(iv) மிசூரிமிசிசிப்பி நதி
(v) நுல்பார் சமவெளி
(vi) கோபி பாலைவனம்
(vii) மடகஸ்கார்
(viii) அரபிக் கடல்
(ix) உலகில் இறப்பு வீதம் உயர்வாகக் கணப்படும் நாடு
(x) 2023 ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்ற நகரம்

(10 புள்ளிகள்)

## பகுதி - III

### பகுதி “அ” (செய்முறைப் புவியியல்)

03. (i) கருப்பொருள் படம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) கருப்பொருள் படம் வரையப்படும் மூன்று முறைகளைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) கருப்பொருள் படங்களின் பயன்பாடுகள் மூன்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இடவிளக்கப்படங்களின் பயன்பாடுகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

04. (i) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) பூகோள இடைநிலைப் படுத்தல் முறைமையில் அடிப்படைப் பிரிவுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iii) பூகோள இடைநிலைப் படுத்தல் முறைமையின் நன்மைகள் மூன்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நவீன படவரைகலையியலின் பொது இயல்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

### பகுதி “ஆ” (பௌதிகப் புவியியல்)

05. (i) தொகுதி என்றால் என்ன? என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) தொகுதிகளின் வகைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) மண் உருவாக்கத்திற்குப் பொறுப்பான காரணிகள் மூன்றினை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் மண் தரமிழப்பிற்குப் பொறுப்பான காரணிகள் மூன்றினைப் பரசீலிக்குக. (06 புள்ளிகள்)

06. (i) அகவிசை, புறவிசை செயற்பாடு என்பதனை சுருக்கமாக குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) புவிக்கவசத்தகடுகளின் எல்லைகளில் இடம்பெறும் மூன்று செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) தகட்டசைவினால் ஏற்படும் விளைவுகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) அமுக்க விசை காரணமாக உருவாகும் மூன்று மடிப்புக்களைக் குறிப்பிட்டு அவற்றின் உருவாக்கம் தொடர்பாக விளக்குக. (06 புள்ளிகள்)

### பகுதி “இ” (மானிடப் புவியியல்)

07. (i) சனத்தொகை அடர்த்தி என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்தமைக்கான காரணங்கள் மூன்றை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டில் வயோதிபர் சனத்தொகை அதிகரிப்பதனால் அந்நாடு எதிர்நோக்கும் சவால்கள் மூன்றைப் பரசீலிக்குக. (06 புள்ளிகள்)


(iv) இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு இடப்பெயர்வினால் கிடைக்கப்பெறும் நன்மைகள் மூன்றை ஆராய்க. (06 புள்ளிகள்)


08. (i) குடியிருப்பொன்றில் காணப்படும் மூலங்கள் நான்கைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மானிடக் குடியிருப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) கிராம மற்றும் நகரக் குடியிருப்புக்களுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்றை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் குறைவான நகராக்கம் இடம்பெறுவதற்கான காரணங்கள் மூன்றை ஆராய்க. (06 புள்ளிகள்)




N
BIBILE
A
B
C
D
E
F
G
H
SCALE 1 : 50 000
Contour Interval 100 feet
0714